தியாகி சிலை திறப்பு...

கடலூர் மாநகராட்சி காந்தி பூங்காவில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் சிலையை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி மூலம் வியாழக்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், அமைச்சர்கள் துரைமுருகன், உதயநிதி ஸ்டாலின், மு.பெ.சாமிநாதன், சி.வி.கணேசன், மாநில திட்டக் குழு முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன், சட்டப்பேரவை உறுப்பினர் நா.எழிலன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சித் துறை செயலர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், அஞ்சலை அம்மாள் குடும்பத்தினர்.

வணிக நிறுவனங்களின் பெயர்கள் தமிழில் இடம்பெற வேண்டும்

சென்னை, நவ. 2: தமிழகத்தில் அனைத்து வணிக நிறுவனங்கள், கடைகளின் பெயர்ப் பலகைகளிலும் தமிழ் முதன்மையாக இடம்பெற வேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை தமிழ் வளர்ச்சி, தொழிலாளர் நலத் துறை இணைந்து மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், சி.வி.கணேசன் ஆகியோர் வலியுறுத்தினர்.

தமிழகத்தில் வணிக நிறுவனங்களில் பெயர்ப் பலகைகளை தமிழில் நிறுவுவது தொடர்பான கூட்டம் சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தமிழ் வளர்ச்சி செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

இதில், தமிழகத்தில் உள்ள வணிக நிறுவனங்கள், உணவகங்கள், கடைகள், வணிக வளாகங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகள் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தமிழில் முதன்மையாக இடம் பெற வேண்டும் என்பதுடன்

அமைச்சர்கள் வலியுறுத்தல்

அதைத் தொடர்ந்து ஆங்கிலத்திலும், அவர்களது தாய்மொழிகளிலும் 5:3:2 என்ற விகிதத்தில் அமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இது குறித்து தமிழ் வளர்ச்சித் துறைச் செயலர் இரா.செல்வராஜ் பேசுகையில், பல மாவட்டங்களில் ஆய்வு செய்தபோது, ஆங்கில பெயர்ப் பலகைகள்தான் மிகுதியாகக் காணப்படுகின்றன. அந்த நிலையை மாற்றி தமிழில் முதன்மையாக அமைய வேண்டும் என வலியுறுத்தினார்.

தொடர்ந்து, தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலர் குமார் ஜெயந்த் பேசுகையில், பெயர்ப் பலகைகள் தொடர்பான விதிமீறல்களுக்கு விதிக்கப்படும் தண்டனைத் தொகையை ரூ. 50-இல் இருந்து ரூ. 2,000-ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசுகையில், தமிழ் வளர்ச்சித் துறை மூலம் டிச.21 முதல் டிச.27 வரை ஆட்சி மொழி சட்ட வார நிகழ்ச்சியில் ஒரு நாள் நிகழ்ச்சியாக வணிக நிறுவனங்களின் பெயர்கள் தமிழில் முதன்மையாக அமைவதை வலியுறுத்தும் வகையில் பேரணி, விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இதை வணிகர் சங்கங்களுடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் நடத்த வேண்டும் என்றார்.

அமைச்சர் சி.வி.கணேசன் பேசுகையில், 'இனிய தமிழையே எங்கும் காண்போம்' என்ற நிலை ஏற்பட உறுதியேற்று இனி வரும் காலங்களில் அனைத்துப் பெயர்ப் பலகைகளிலும் தமிழ் முதன்மையாக இடம்பெற தமிழ் வளர்ச்சித் துறையுடன் தொழிலாளர் நலத் துறையும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவ்வை ந.அருள், தொழிலாளர் ஆணையர் அதுல் ஆனந்த் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சங்கரய்யாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் தரவேண்டும்

அண்ணாமலை

சென்னை, நவ. 2: சுதந்திர போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டும் என்று தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியது:

சுதந்திர போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டும். அதற்கு ஒப்புதல் வழங்காதது குறித்து ஆளுநர் மாளிகைதான் விளக்க வேண்டும். சங்கரய்யாவுடன் வேறுயாருக் காவது பரிந்துரைத்து பட்டியல் அளிக்கப் பட்டதா? எனத் தெரியவில்லை.

'இந்தியா' கூட்டணி வலுவாக இல்லை என்பதை 5 மாநிலத் தேர்தல் கள நிலவரம் உணர்த்துகிறது.

விஜய்க்கு வரவேற்பு: யார் அரசியலுக்கு வந்தாலும் வரவேற்பேன். அதற்கு யாருமே தடையாக இருக்கக் கூடாது. 3 கட்சிகள் இருப்பதற்குப் பதில் 6 கட்சிகள் இருந்தால் இன்னும் சிறப்புதான்.

மக்களுக்கு சேவை செய்ய வரும் புதியவர்கள் தங்களது கொள்கைகளை மக்கள் முன்பு வைக்க வேண்டும். யார் கொள்கைகளை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பது தேர்தலுக்குப் பிறகு தெரிந்துவிடும். நடிகர் விஜய் போன்ற புதியவர்கள் அரசியலுக்கு வந்தால்தான் அரசியல் நடைமுறை மாறும் என்றார் அவர்.

பாஜக – அதிமுக மறைமுகக் கூட்டணியை அம்பலப்படுத்துவோம்

முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ. 2: பாஜக - அதிமுக இடையிலான மறைமுகக் கூட்டணியை அம்பலப்படுத்தவேண்டுமென கட்சியினரை முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை உருக்குலைத்து, மாணவர்களின் மருத்துவப் படிப்புக் கனவைச் சிதைக்கும் நீட் தேர்வுக்கு எதிராக அமைச்சர் உதயநிதி தொடங்கியுள்ள கையொப்ப இயக்கம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதில், கட்சியின் கடைக்கோடி தொண்டர்கள் பங்கேற்று கையொப்பமிடுவது மட்டுமின்றி, அவரவர் பகுதியில் உள்ள பொதுமக்களிடமும் மாணவர்களிடமும் கையொப்பத்தைப் பெற வேண்டும்.

இளைஞரணி சார்பில் டிச.17-ஆம் தேதி, சேலம் மாநகரில் நடைபெறவுள்ள இளைஞரணியின் மாநில மாநாட்டை கட்சியினர் அனைவரும் ஒருங்கிணைந்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய கடமையையும் திமுக தனது தோளில் சுமந்துள்ளது. அதற்காக கட்சியினர் அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும். அரசின் திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாஜகவுடன் கூட்டுச் சேர்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் எண்ணற்ற துரோகங்கள் செய்துவிட்டு, இப்போது கூட்டணி முறிந்துவிட்டதாக அதிமுக வேஷம் போடுகிறது. அவர்களது மறைமுகக் கூட்டணியை அம்பலப்படுத்த வேண்டும். இதற்காக வீடு வீடாக பிரசாரப் பணி மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
மொண்டிபட்டி - 621 306. திருச்சி மாவட்டம், தமிழ்நாடு. தொலைபேசி : 04332 - 261600.
இமெயில் : tos.u2@tnpl.co.in

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
232423 002989	திருச்சி TNPL அலகு - IIல் நிலக்கரியை கையாளும் பணி	17.11.2023
232423 002990	திருச்சி TNPL அலகு - IIல் உள்ள பிணிசிங் ஹவுஸில் ரீல்ஸ், பேக்கிங், கட்டர் மற்றும் கிலெடின் இயக்கங்களை கையாளுதல்	17.11.2023
232423 002991	திருச்சி TNPL அலகு - IIல் மார்க்கெட்டிங் கிடங்கில் பண்டல்கள், ரீல்கள் மற்றும் பேலட்களை பெறுதல் மற்றும் அனுப்புதல்	20.11.2023
232423 002993	திருச்சி TNPL அலகு - IIற்காக பெருகமணியில் உள்ள தண்ணீர் எடுக்கும் கிணற்றின் நீரேற்று நிலையத்தை இயக்குதல் மற்றும் பராமரித்தல்	20.11.2023
232423 003075	திருச்சி TNPL அலகு - IIல் உள்ள சிப்பர் ஹவுஸ், பல்ப் மில், Cl O2, O2 மற்றும் N2 ஆலையில் இயந்திர பராமரிப்பிற்கான உதவு சேவை அளித்தல்	17.11.2023

விரிவான விதிமுறைகள் & நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளிக் கட்டணம், பிணை வைப்புத்தொகை ஆகியன www.tnpl.com இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ/5845/ஒப்பந்தப்புள்ளி/2023 நாட்டின் இயற்கையைப் போற்றும் காகிதம் செய்வோம்

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகிதபுரம் - 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04324 - 277001 (10 இணைப்புகள்).

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
232433 000305	TNPL சிமெண்ட் ஆலையின் இயக்கத்திற்கு பணித்திறன் மிக்க பணியாளர்களை வழங்குதல்	17.11.2023
பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் & நிபந்தனைகள், ஆகியவற்றை : www.tnpl.com இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.		
232413 004948	ஈரோடு, பள்ளிபாளையம், திருவாளர்கள் பொன்னி சுகர்ஸ் லிமிடெட்டிலிருந்து காகிதபுரம் TNPL முதன்மை இடத்திற்கு, சலிக்கப்பட்டு, கட்டப்பட்ட கரும்புச் சக்கையைக் கொண்டு செல்லுதல்	10.11.2023
232413 004949	தைலமர மற்றும் சவுக்கு மர - கூழ்மரக்கட்டைகளை தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலுள்ள TNPLன் கொள்முதல் டிப்போக்களிலிருந்து, TNPLஅலகு - I, காகிதபுரம், கரூர் மற்றும் TNPL அலகு - II, மொண்டிபட்டிக்கு போக்குவரத்து செய்தல்.	10.11.2023

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL & NIC இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் & நிபந்தனைகள், ஆகியவற்றை : www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
இமெயில் 232433000305 - tech_services@tnpl.co.in
232413004948 & 4949 - purchase.trans@tnpl.co.in
செ.ம.தொ.இ/5846/ஒப்பந்தப்புள்ளி/2023 நாட்டின் இயற்கையைப் போற்றும் காகிதம் செய்வோம்

தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை.
வேளச்சேரி, சென்னை - 42.

தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்புத்துறையில் அரசுத் துறை வாகனங்களுக்கான மின்கலன்கள் கொள்முதல் செய்வதற்கு நவம்பர் 2023-ல் ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் வரவேற்கப்படுகின்றன. மேற்கண்ட செயல்பாடுகளுக்கான தேதிகள், இ-டெண்டர் விண்ணப்பம் பதிவிறக்கம் துவங்கும் தேதி, இ-டெண்டர் விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் இ-டெண்டர் திறக்கப்படும் தேதிகள், விதிமுறைகள், வரையறைகள் அடங்கிய அனைத்து விபரங்களையும் அறிய தொடர்புக்கு https://tntenders.gov.in என்ற இணைய தளத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.கி./5867/ஒப்பந்தப்புள்ளி/2023 இயக்குநர்

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ इंडिया
Central Bank of India
1911 से आपके लिए "केंद्रित" "CENTRAL" TO YOU SINCE 1911
பிராந்திய அலுவலகம்: எண்.48/49, மாண்டியத் ரோடு, இரண்டாவது தளம், எழும்பூர், சென்னை-600008 தொலைபேசி: 044 2888 3201
மின்னஞ்சல்: rmchenro@centralbank.co.in இணையதளம்: www.centralbankofindia.co.in

BC மையத்தை கண்காணிப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் BC மேற்பார்வையாளர்கள் தேவை
BC மேற்பார்வையாளர் - 02 பணியிடங்கள் (நியமன இடம்: செங்கல்பட்டு, வேலூர்)

a) இளம் விண்ணப்பதாரர்களுக்கான தகுதி: பட்டதாரி / முதுநிலை பட்டதாரி கணினி திறன் (MS ஆஃபிஸ், எக்செல், இணையம், மின்னஞ்சல் முதலானவை) M.Sc(IT) / BE(IT) / MCA / MBA ஆகியோருக்கு முன்னுரிமை (வயது வரம்பு 21 - 45 வயது)

b) ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்களுக்கான தகுதி: (பொதுத்துறை (PSU) / ஊரகவங்கி (RRB) / தனியார் வங்கிகள் / கூட்டுறவு வங்கிகள்) குறைந்தபட்சம் ஸ்கேல் 3 நிலையில் ஓய்வு பெற்ற முதுநிலை மேலாளராகவோ அல்லது JAIIB தேர்ச்சி பெற்ற சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் ஓய்வு பெற்ற எழுத்தராகவோ இருத்தல் வேண்டும். (வயது வரம்பு: அதிகபட்சம் 64 வயது)

நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் - ₹ 15,000/- மாதத்திற்கு + வாகனத்தொகை ₹ 10,000/- (அதிகபட்சம்) செயல்திறன் அடிப்படையில் + போக்குவரத்து செலவு ₹ 3,000/- (அதிகபட்சம்) + மொபைல் செலவு ₹ 500/- (அதிகபட்சம்)

இது தொடர்பாக தேவையான பிற தகவல்கள், தகுதி, விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்ய வங்கியின் www.centralbankofindia.co.in இணையதளத்தை அணுகலாம்.

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை எமது பிராந்திய அலுவலகம், எண்.48/49, 2வது தளம், மாண்டியத் ரோடு, சென்னை - 600 008 என்னும் முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்புவதற்கான கடைசி தேதி: 20.11.2023

தேதி: 03.11.2023
இடம்: சென்னை
அதிகாரபூர்வ அலுவலர்
சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா

GOVERNMENT OF TAMIL NADU
REGIONAL DIRECTOR OF MUNICIPAL ADMINISTRATION, MADURAI REGION
Phone Number : 0452-2389821 Website: https://tnurbantree.tn.gov.in/

Regional Director of Municipal Administration, Madurai invites applications from the eligible candidates for the post of CARE TAKER to work on contract basis for a period of one year to take care of the Modern Libraries cum Knowledge Centres constructed in Kalaignar Nagarppura Mempattu Thittam.

CARE TAKER

Application and instructions can be downloaded from the **website** **https://tnurbantree.tn.gov.in/** (please check in "what's New" in the website **https://tnurbantree.tn.gov.in/** also

Last date of receipt of application is **17.11.2023**

DIPR/1261/DISPLAY/2023

Regional Director of Municipal Administration, Madurai Region.

மரண அறிவிப்பு

குடியாத்தம், நெல்லூர்பேட்டை, 157, சன்னதி வீதி,
லேட். கூலாரி. **P.சாம்பசிவ முதலியார்** மகனும்
குடியாத்தம் நகரமன்ற தலைவர் - குடியாத்தம் நகர திமுக செயலாளர்
எஸ்.சௌந்தர்ராசன் அவர்களின் மாமனாரும்,
எனது அன்பு கணவருமான

"பிரியா"
திரு.S.கார்த்திகேயன் B.Sc.,
முன்னாள் மாவட்ட துணைத்தலைவர், வேலூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி

அவர்கள் நேற்று **02 - 11 - 2023 வியாழக்கிழமை** காலை 11.30 மணியளவில் இயற்கை எய்தினார்.
அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று **03 - 11 - 2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு** நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
மனைவி : M.K.கலைச்செல்வி

மகள்கள் :
M.K.பிரியா
நிறுவனர், ஆரியாTV
குடியாத்தம்
Dr.K.K.சங்கீதா
சென்னை

மருமகன்கள் :
எஸ்.சௌந்தர்ராசன்
நகர மன்றதலைவர் - நகர திமுக செயலாளர்
குடியாத்தம்
N.அஜீத்
ஜவுளி வியாபாரம், சென்னை

மகன் : **K.K.ஜெகன்**
மருமகள் : **J.கோகிலா**

மற்றும் பேரன், பேத்திகள், உறவினர்கள், நண்பர்கள்

செல் : 98423 98426, 95852 40799

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
murugappa
CIN: L65993TN1978PLC007576
பதிவு அலுவலகம்: "சோழா கிரெஸ்ட்", C54 & C55, சூப்பர் B-4 திரு. வி. க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை - 600 032.
Phone number: 044-40907172; Fax number: 044 - 40906464 Email: investors@chola.murugappa.com; Website: www.cholamandalam.com

தேர்ந்தெடுக்கப்பட்ட விரிவான படிவத்தில் செப்டம்பர் 30, 2023 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டுமொத்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(₹ கோடிகளில்)

வ. எண்	விபரங்கள்	தனிப்பட்ட					
		முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஆறு மாதங்கள்		முடிவடைந்த ஆண்டு
		30.09.2023 தணிக்கை செய்யப்படாதது	30.06.2023 தணிக்கை செய்யப்படாதது	30.09.2022 தணிக்கை செய்யப்படாதது	30.09.2023 தணிக்கை செய்யப்படாதது	30.09.2022 தணிக்கை செய்யப்படாதது	31.03.2023 தணிக்கை செய்யப்பட்டது
1.	செயல்பாடுகள் மூலம் வருமானம்	4,571.89	4,133.62	3,037.78	8,705.51	5,808.71	12,977.98
2.	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம்	1,020.75	967.53	758.06	1,988.28	1,519.79	3,599.69
3.	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம்	762.49	726.01	563.41	1,488.50	1,129.07	2,666.20
4.	இக்காலத்திற்கான மொத்த வருமானம் (இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் வரிக்கு பின் மற்றும் இதர விரிவான வருமானம் வரிக்குப்பின்)	778.88	712.94	581.37	1,491.82	1,172.68	2,700.01
5.	சமபங்கு மூலதனம்	164.57	164.51	164.39	164.57	164.39	164.48
6.	கையிருப்புகள் (மறு மதிப்பீடு கையிருப்புகள் நீங்கலாக, பத்திரங்கள் பிரீமியம் கணக்கு மற்றும் மூலதன மீட்பு இருப்பு	12,649.37	11,911.95	9,750.14	12,649.37	9,750.14	11,185.58
7.	பத்திரங்கள் பிரீமியம் கணக்கு	2,926.48	2,917.31	2,901.15	2,926.48	2,901.15	2,912.99
8.	மூலதன மீட்பு இருப்பு	33.00	33.00	33.00	33.00	33.00	33.00
9.	நிகர மதிப்பு	15,773.42	15,026.77	12,848.68	15,773.42	12,848.68	14,296.05
10.	கடன் நிலுவை	119,469.53	108,140.09	79,321.48	119,469.53	79,321.48	97,356.06
11.	நிலுவையில் உள்ள மீட்டெடுக்கக்கூடிய விருப்பப் பங்குகள்	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
12.	கடன் பத்திர மீட்பு இருப்பு	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
13.	கடன் சம விகிதம்	7.57	7.20	6.17	7.57	6.17	6.81
14.	பங்கு விகித ஈட்டுத்தொகை (EPS) (₹ 2/- ஒரு பங்கிற்கு) (இடைக்காலத்திற்கு வருடாந்தரப்படுத்தப்படவில்லை)						
	அ) அடிப்படை	9.27	8.83	6.86	18.10	13.75	32.45
	ஆ) குறைமதிப்பு	9.25	8.81	6.85	18.05	13.72	32.40

குறிப்பு: வட்டி சேவை பாதுகாப்பு விகிதம் மற்றும் கடன் சேவை பாதுகாப்பு விகிதம் நிறுவனம் NBFC ஆக இருப்பதால் பொருந்தாது.

(₹ கோடிகளில்)

வ. எண்	விபரங்கள்	ஒட்டுமொத்த					
		முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஆறு மாதங்கள்		முடிவடைந்த ஆண்டு
		30.09.2023 தணிக்கை செய்யப்படாதது	30.06.2023 தணிக்கை செய்யப்படாதது	30.09.2022 தணிக்கை செய்யப்படாதது	30.09.2023 தணிக்கை செய்யப்படாதது	30.09.2022 தணிக்கை செய்யப்படாதது	31.03.2023 தணிக்கை செய்யப்பட்டது
1.	செயல்பாடுகள் மூலம் வருமானம்	4,695.16	4,170.79	3,067.02	8,865.95	5,862.93	13,105.59
2.	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம்	1,061.70	952.37	758.60	2,014.07	1,517.36	3,602.77
3.	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம்	772.87	709.94	562.82	1,482.81	1,124.83	2,664.85
4.	இக்காலத்திற்கான மொத்த வருமானம் (இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் வரிக்கு பின் மற்றும் இதர விரிவான வருமானம் வரிக்குப்பின்)	773.05	702.57	582.66	1,475.62	1,163.03	2,688.73
5.	சமபங்கு மூலதனம்	164.57	164.51	164.39	164.57	164.39	164.48
6.	கையிருப்புகள் (மறு மதிப்பீடு கையிருப்புகள் நீங்கலாக, பத்திரங்கள் பிரீமியம் கணக்கு மற்றும் மூலதன மீட்பு இருப்பு	12,683.20	11,951.60	9,801.82	12,683.20	9,801.82	11,235.63
7.	பத்திரங்கள் பிரீமியம் கணக்கு	2,926.48	2,917.31	2,901.15	2,926.48	2,901.15	2,912.99
8.	மூலதன மீட்பு இருப்பு	33.00	33.00	33.00	33.00	33.00	33.00
9.	நிகர மதிப்பு	15,807.25	15,066.42	12,900.36	15,807.25	12,900.36	14,346.10
10.	கடன் நிலுவை	1,19,470.90	1,08,140.49	79,321.84	1,19,470.90	79,321.84	97,357.50
11.	நிலுவையில் உள்ள மீட்டெடுக்கக்கூடிய விருப்பப் பங்குகள்	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
12.	கடன் பத்திர மீட்பு இருப்பு	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
13.	கடன் சம விகிதம்	7.56	7.18	6.15	7.56	6.15	6.79
14.	பங்கு விகித ஈட்டுத்தொகை (EPS) (₹ 2/- ஒரு பங்கிற்கு) (இடைக்காலத்திற்கு வருடாந்தரப்படுத்தப்படவில்லை)						
	அ) அடிப்படை	9.40	8.64	6.85	18.03	13.69	32.44
	ஆ) குறைமதிப்பு	9.37	8.62	6.84	17.98	13.67	32.38

குறிப்பு: வட்டி சேவை பாதுகாப்பு விகிதம் மற்றும் கடன் சேவை பாதுகாப்பு விகிதம் ஹோல்டிங் நிறுவனம் NBFCஆக இருப்பதால் பொருந்தாது.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் செபி (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015, 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செப்டம்பர் 30, 2023 உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டுமொத்த நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் www.cholamandalam.com இணையதளங்களிலும் காணலாம்.

இயக்குனர்கள் குழு சார்பாக
ரவீந்திர குமார் குண்டு
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : நவம்பர் 02, 2023